IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.
C.C.NO.33/2018
DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | NOORULLA |
| FATHER'S NAME | : | FAZULULLAH |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22th day of April 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் குடியாத்ததில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடுபோட்டையில் உள்ள பெண்கள் உயர்நிலை பள்ளி அருகே நின்று கொண்டிருந்தபோது போலிசார் குடும்ப சண்டை சம்பந்தமாக விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள ஒன்றாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 02.11.2015 ஆம் தேதி இரவு சுமார் 07.45 மணிக்கு நானும், அலாவுதின் என்பவரும் சம்பவ இடத்தில் இருவரும் இருந்தபோது, அனைத்து மகளீர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்றைய தினம் நடந்த ஒரு சண்டை சம்பந்தமாக தொடர்பாக புலன் விசாரணை செய்ததாகவும், அங்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததகாவும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

S/d–Selvi.R.Saranya.,B.A.,LLB(Hons)LLM.,
Judicial Magistrate,
Gudiyatham.